முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No.3/2022

தேதி : 05-02-2025

(வா.சா.1) – திரு.சேகர்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். நிரூபணவாக்குமூலத்திற்கு தகவல் சொன்னது யார் என்றால் வழக்கறிஞர் தயார் செய்தது, நான் படித்து பார்த்து சரியென்று பிறகு கையெழுத்து போட்டேன். எதற்காக வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் பணம் கேட்டேன். எதன் அடிப்படையில் வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் புரோநோட் அடிப்படையில். சொந்த ஊர் என்ன என்றால் சரவணப்பட்டி. பிரதிவாதியின் சொந்த ஊர் என்ன என்றால் திண்டுக்கல். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம். விவசாயத்தினை தவிர வேறு தொழில் இல்லை என்றால் ஏற்கனவே கூட்டுறவில் வேலை பார்த்தேன் ஓய்வு பெற்றேன். எந்த ஆண்டில் ஓய்வு பெற்றேன் என்றால் 2012ல்.

2. பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என்றால் கல்லூரியில், என்ன வேலை என்றால் தெரியாது. எந்த கல்லூரியில்வேலை பார்க்கிறார் என்றால் பழனியாண்டவர் கல்லூரியில. தற்போது அவர் பணியில் உள்ளாரா என்றால் தெரியாது. நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் காலகட்டத்தில் மேற்படி கல்லூரியில் வேலை பார்த்தாரா என்றால் ஆமாம். அவருடைய சம்பள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி எனக்கு உறவினரா என்றால் இல்லை. என்னுடைய மாத வருமானம் சுமார் எவ்வளவு என்றால் ரூ. 20 ஆயிரம்.

3. நான் வருமான வரி தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. வங்கி கணக்கு வைத்துள்ளேன் என்றால் ஆமாம். புராமிசரி நோட் எழுதிக்கொடுத்ததாக சொல்கிறேன் என்றும், அது எப்போது என்றால் 15.03.2020. மேற்படி தேதி என்ன

கிழமை என்று சொல்ல முடியுமா என்றால் தெரியாது. என்ன நேரம் என்றால் காலை நேரம், மணி ஞாபகமில்லை. புரோநோட்டில் யார் யார் எல்லாம் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் ஜோதி குமரவேல் என்பவரும் நோட்டை எழுதிய முத்துச்சாமி என்பவரும் ஆவார்கள். மேற்படி 2 பேரும் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரவணப்பட்டி.

4. மேற்படி 2 சாட்சிகளில் யார் முதலில் கையெழுத்து போட்டார்கள் என்றால் முத்துச்சாமி கையெழுத்திட்டார், பிரதிவாதி கையெழுத்து போட்ட பின்னர் சாட்சிகள் கையெழுத்து போட்டார்கள். பிரதிவாதி இந்த வழக்கில் என்ன எதிர்வாதம் என்றால் தெரியாது. பிரதிவாதிக்கு நான் யார் என்று தெரியாது என்றும், அவர் என்னிடம் கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. பிரதிவாதி மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

5. வழக்கின் புரோநோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது இல்லை என்றால் சரியல்ல. புரோநோட்டை வைத்து கடன் கொடுக்கும் வழக்கம் எனக்கு உண்டா என்றால் இல்லை. பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கவும் இல்லை, புரோநோட் எழுதி கொடுக்கவும் இல்லை, கடன் கொடுப்பதற்கான வசதியும் இ்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் எதிரிகளின் தூண்டுதல்களின்பேரில் இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை எனக்கு யார் என்று தெரியாது என்றும், அவர் நல்ல வேலையில் இருப்பதால் கடன் வாங்க வேண்டிய அவசியமுமில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன் வாங்காததால் வழக்கு நிலைக்கத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்./–K.ரேணுகாதேவி
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.